29 டிசம்பர் 2024
இயேசு, மரியா யோசேப்பின் திருக்குடும்பம்

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் எதிர்நோக்கின் திருப்பயணிகள்

# பார்க்கமுடியாதவற்றிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்

ஒவ்வொரு ஆண்டும் நாட்காட்டியின் இறுதிவாரத்தில் திருஅவை திருக்குடும்ப விழாவைக் கொண்டாடுகிறது. கிறிஸ்துவ குடும்பங்களாக, நாம் இயேசு மரி யோசேப்பின் திருக்குடும்பத்தைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறோம். இதை மாபெரும் பெரிய ஒழுங்குமுறை என்று நினைக்காமல், நாசரேத்து திருக்குடும்பத்தின் பின்னணியை சிறிது நினைவு கூர்வோம்.



மரியா பதின்மவயதில் இருந்த இளம்பெண், மரியா திருமணத்திற்கு முன்பே கருவுற்றிருந்தார். யோசேப்பு வெளிப்படையாக அவரை அவமானப்படுத்துவதிலிருந்து தப்புவிப்பதற்காக அவரைவிட்டு விலகிட நினைக்கிறார். மாட்டுத்தொழுவத்தில் இருந்த தீவனத்தொட்டியில் தான் இயேசு பிறக்கிறார். ஏரோதின் கோபத்திலிருந்து தப்பிப்பதற்காக அந்தக் குடும்பம் எகிப்திற்கு ஓடவேண்டியிருந்தது. சில ஆண்டுகளுக்கு அவர்கள் அகதிகளாக வாழவேண்டியிருந்தது.

திருக்குடும்பத்தைப் பற்றி சிந்திக்கும்போது ஒருவர் இவ்வாறு குறிப்பிட்டார். “நாம் பார்க்கமுடியாதவற்றிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? திருக்குடும்பம் குழப்பமான வாழ்க்கையை வாழ்ந்தனர். அந்தக் குழந்தை எவ்வாறு வளர்க்கப்பட்டது என்பதைப் பற்றி அதிகம் குறிப்பிடப்படவில்லை. கோவிலில் காணாமல் போய் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது மற்றும் “இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்துவந்தார். என்று ஒரு வரியுடன் முடிவடைகிறது.

ஆயினும் திருக்குடும்பம் அன்பில் வேரூன்றிய குடும்பங்களை உருவாக்கும் கிறிஸ்துவர்களுக்கு ஒரு முன்மாதிரி. திருக்குடும்பம் சட்டத்தையும் அதனுடைய தேவைகளையும் உண்மையாகக் கடைப்பிடித்தார்கள் என்பதை நாம் அறிவோம். மரியா தூய ஆவியாருக்குக் கீழ்ப்படிந்தார். அவருடைய புகழ்ப்பாடல் புனிதநூல்களிலிருந்து எடுக்கப்பட்டது. விவிலியம் கூறுவதுபோல யோசேப்பு ஒரு “நீதிமான்” இயேசுவின் வாழ்க்கை வேதாகமங்களின்படியும், மரபுகளிலும் மூழ்கியிருந்தது. நாசரேத்து இல்லத்தில் உள்ள சூழல் அன்பும் மரியாதையும் நிறைந்ததாக இருந்திருக்கும். இயேசு தனது வளர்ப்புத் தந்தையின் தொழிலில் பயிற்சி பெறுகிறார். கூடுதலாக, விண்ணகத்தந்தையின் வேலையைப் பற்றி 12 வயதிலேயே அறிந்தவராக இருக்கிறார்.

சீராக் இறைவாக்கினர் நம் பெற்றோரை மதிக்கக் கற்றுக்கொடுக்கிறார். தந்தைக்கு பிள்ளைகள் மரியாதைத் தரவேண்டுமென்றும், தங்கள் பிள்ளைகள் மீது அன்னைக்கு உரிமை உள்ளது என்றும் கடவுள் வரையறுத்துள்ளார். பவுல் அடிகளாரும் இரண்டாம் வாசகத்தில் குடும்ப உறுப்பினர்களுக்கு மரியாதைத் தரவும் பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் அணி செய்யவும், ஒருவரையொருவர் பொறுத்துக்கொள்ளவும் மன்னிக்கவும் அறிவுறுத்துகிறார். இவை அனைத்திற்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள் என்று கூறுகிறார்.

ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்வோம். பார்க்கமுடியாதவற்றிலிருந்து நாம் எவ்வாறு கற்றுக்கொள்ளமுடியும் என்ற கேள்வியை நம்மைப் பார்த்து நாமே கேட்டுக்கொள்வோம்.

கிறிஸ்துவில் மட்டுமே மனிதன் மீட்பைக் கண்டடையமுடியும் என்னும் நற்செய்தியை ஒவ்வொரு குடும்பங்களும் மீண்டும் கண்டுபிடிக்கவேண்டும் என்பதே என்னுடைய எதிர்நோக்கு.

புனித 2 ஆம் ஜோன் போல்




### இன்றைய இறைவார்த்தை:

தானியேல் 7: 13-14

திபா: 93: 1-2,5

திருவெளிப்பாடு: 1: 5-8

யோவான்: 18: 33-37

INTERNAL CIRCULATION ONLY
BUL 52/2024

Published by: Archdiocesan Pastoral Institute (API) | Email: api@archkl.org